புதுச்சேரி அரசு
துணைநிலை ஆளுநர் செயலகம்

**No. LGS/PRO/2025** **13 அக்டோபர் 2025**

**<u>பத்திரிகை செய்தி</u>**

புதுச்சேரி இந்திரா காந்தி சதுக்கம் முதல் ராஜீவ் காந்தி சதுக்கம் வரை ரூ 436 கோடி மதிப்பீட்டில் புதிய மேம்பாலம் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டு விழா வேளாண்துறை வளாக மைதானத்தில் இன்று(13.10.2025) நடைபெற்றது. மாண்புமிகு மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் திரு நிதின் கட்கரி புதிய மேம்பாலம் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டினார்.

மாண்புமிகு துணைநிலை ஆளுநர் திரு K.கைலாஷ்நாதன் பேசியபோது, கூடுதலாக, நடேசன் நகர் முதல் மரப்பாலம் வரை மற்றும் அரியாங்குப்பம் முதல் முல்லோடை வரையிலான இரண்டு மேம்பாலங்களுக்கும் அனுமதி அளிக்க வேண்டும் என்று மத்திய அமைச்சரை கேட்டுக்கொண்டார். மத்திய சாலைப்போக்குவரத்து துறை அமைச்சரும் இரண்டு மேம்பாலங்களுக்குமான ஒப்புதலை மேடையிலேயே அறிவித்தார்.

நிகழ்ச்சியில்,மாண்புமிகு மத்திய தகவல் ஒளிபரப்பு துறை இணை அமைச்சர் திரு முருகன், மாண்புமிகு முதலமைச்சர் திரு ந. ரங்கசாமி, மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு R.செல்வம், மாண்புமிகு உள்துறை அமைச்சர் திரு ஆ.நமச்சிவாயம், பொதுப்பணித்துறை அமைச்சர் திரு லட்சுமிநாராயணன், மாண்புமிகு வேளாண் அமைச்சர் திமுக ஜெயக்குமார், மாண்புமிகு குடிமைப்பொருள் அமைச்சர் திரு PRN.திருமுருகன், மாநிலங்களவை உறுப்பினர் திரு S.செல்வகணபதி, மக்களவை உறுப்பினர் திரு வெ. வைத்திலிங்கம், சட்டமன்ற உறுப்பினர்கள், நெடுஞ்சாலைத்துறை மற்றும் பொதுப்பணித்துறை அதிகாரிகள் ஆகியோர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

முன்னதாக, துணைநிலை ஆளுநர், மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சரை விமான நிலையத்தில் பூங்கொத்துடன் வரவேற்றார்.